# பின்னுரை

# உள்ளாகப் பார்க்கின்ற நீங்கள் புறம்பே இருப்பவரானால்

*"ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக் கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத் தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்'' (வெளி. 22:17).*

நீங்கள் எங்கே இருக்கின்றீர்கள்? நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றீர்களா அல்லது அவருக்குப் புறம்பே இருக்கின்றீர்களா? நீங்கள், "நான் புறம்பேயிருந்து உள்ளே நோக்குவதைப் பார்க்கிலும், உள்ளே இருந்து புறம்பே நோக்குபவனாயிருக்க விரும்புகிறேன்" என்ற பல்லவியைக் கேட்டிருக்கலாம். இந்தப் பல்லவியின் வசனமானது ஒரு சிறைச்சாலையைக் குறிப்பதாக இருந்தால் நான் உள்ளே இருந்து கொண்டு புறம்பே நோக்கு பவனாக அல்ல, மாறாக வெளியே இருந்து உள்ளே நோக்குபவனாக இருப்பதையே விரும்புவதால் இதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்! இருப்பினும் இவ்விடத்தில் கிறிஸ்துவின் சபை என்பது பாடக் கருத்தாய் இருந்தால், எந்த ஆட்சேபனைகளுமின்றி நான் இப்பாடலைப் பாட முடியும் - நான் உள்ளிருந்து புறம்பே நோக்குபவனாக இருக்க விரும்பு கின்றேன்.

புதிய ஏற்பாட்டில் சபையுடன் தொடர்புடைய வேத வசனங்களைக் கவனித்து அறிந்த பிறகு, நீங்களும் நிச்சயமாக நான் நம்புவதைப் போலவே நம்புவீர்கள். "சபை"க்கான தேவனுடைய வடிவ மாதிரியைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்து விட்டு, அதன் அங்கமாயிருக்க விரும்பாமல், உள்ளிருந்து வெளியே நோக்க ஏக்கம் கொள்ளாமலிருக்க யாரால் முடியும்?

நீங்கள் சபையின் புறம்பே இருந்து கொண்டு, அதன் உள்ளாக

*நோக்குபவராய் இருந்தால், இங்கிருந்து நீங்கள் எங்கு செல்லுகின்றீர்கள்? நீங்கள் எவ்விதத்தில் சபைக்குள் பிரவேசிக்கவோ அல்லது கிறிஸ்துவின் சரீரத்தில் உறுப்பாகவோ முடியும்?*

*இயேசுவே நம்மை அவருடைய சபைக்குள் சேர்த்துக் கொள்கின்றார். இந்த வார்த்தையின் உலகப்படியான அர்த்தத்தில் நீங்கள் அதில் இணைய முடியாது; ஆயினும், முதல் நூற்றாண்டில் வசனத்தைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டு அதற்குக் கீழ்ப்படிந்தவர்களுக்கு அவர் செய்தது போலவே (அப். 2:47) உங்களையும் அவர் அதனுள் மகிழ்வுடன் சேர்த்துக் கொள்வார். அவர்கள், வசனத்தில் தங்களுக்குச் சித்தரிக்கப்பட்ட இயேசுவை விசுவாசித்தனர் (அப். 2:41; ரோமர் 10:17), அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி அன்றாட வாழ்வில் கிறிஸ்துவைப் பின்பற்றும்படியாக தீர்மானமான முடிவெடுத்தனர் (அப். 17:30, 31), அவர்கள் தங்கள் உதடுகளினால் இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டதினால் கிறிஸ்துவின்மீது தங்கள் இருதயங்களில் கொண்டிருந்த விசுவாசத்தை உறுதிப்படுத்தினர் (ரோமர் 10:10), மற்றும் தங்களின் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக முழுக்காட்டப் படுதலினால் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றனர் (ரோமர் 6:3; அப். 2:38; 22:16). அவர்கள் தங்களுக்குப் பிரசங்கிக்கப்பட்ட வசனத்திற்குக் கீழ்ப்படிந்த பொழுது, கிறிஸ்து தம்முடைய சபையில் அவர்களைச் சேர்த்துக் கொண்டார் (அப். 2:47). அவர்கள் செய்தவற்றை நீங்களும் செய்யுங்கள், அப்பொழுது கிறிஸ்து அவர்களுக்குச் செய்ததை உங்களுக்கும் செய்வார். முதல் நூற்றாண்டில் அவர்களைக் கிறிஸ்தவர்களாக்கிய அதே சுவிசேஷம் இன்று உங்களையும் கிறிஸ்தவராக்கும்.*

*நீங்கள் கிறிஸ்தவராவது எப்படி என்பதை அறிந்தும், முதலாவது எந்த அடிவைப்பை எடுத்து வைப்பது என்பதை அறியாதிருந்தால், உங்களுக்கு அருகிலிருக்கும் சுவிசேஷப் பிரசங்கியார் ஒருவரை அழையுங்கள். உங்கள் தொலைபேசி எண் அட்டவணைப் புத்தகத்தில் கிறிஸ்துவின் சபை என்பதில் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள தொலைபேசி எண்ணைக் கொண்டு, நீங்கள் அவரைத் தொலைபேசியில் அழைக்கலாம். அவர் உங்களுக்கு உதவி செய்வதில் மிக்க மகிழ்சியடைவார். எஜமானர் தம்முடைய ஏவப்பட்ட வசனத்தின் மூலமாக நமக்குக் கொடுத்திருக்கும் இரட்சிப்பின் திட்டம் தவிர வேறெந்தத் திட்டத்திற்கும் உடன்படாதீர்கள். நீங்கள் கிறிஸ்துவின் வசனத்திற்குக் கீழ்ப்படிகிறவர் என்ற வகையில் உங்கள் முழு இருதயத்தையும் அவருக்குக் கொடுங்கள், அப்பொழுது அவர் தம்முடைய சரீரத்தில் (சபையில்) உங்களை இணைத்துக் கொள்வார் என்று நீங்கள் உறுதிப்படுத்திக் கொண்டவர்களாய் இருக்க முடியும். கிறிஸ்துவுக்கு நீங்கள் இவ்விதமாகக் கீழ்ப்படிந்த பிறகு, அவரது சபையாராக அவருக்காக வாழுங்கள். உங்களுக்கு அருகாமையில் கிறிஸ்துவின் சபை எதுவும் இல்லையென்றால், இப்புத்தகத்தின் முன் பகுதியில் உள்ள பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுதுங்கள், நாங்கள் உங்களுக்கு உதவும்படியாகச் சிலரை உங்கள் பகுதியில் நீங்கள் கண்டறிய உதவுவோம்.*

*இயேசு கட்டியெழுப்பிய சபையைப் பற்றி நீங்கள் அதிகமாய்ப் படிக்க*

விரும்பினால், முன்பக்கத்தில் உள்ள முகவரிக்கு எழுதுங்கள், மற்றும் நாங்கள் உங்களை அஞ்சல் வழி வேதாகமப் பாடத்தில் பதிவு செய்து கொள்வோம். தயவு செய்து புறம்பேயிருந்து உள்ளே நோக்குபவராயிராதீர்கள்; கிறிஸ்து தம்முடைய மகிமையுள்ள சபையில் உங்களை சேர்த்துக் கொள்ளும்படி அனுமதியுங்கள் அதனால், நீங்கள் இப்பொழுது பரிபூரணமான வாழ்வையும் வரவிருக்கும் உலகில் நித்திய ஜீவனையும் மகிழ்வுடன் அனுபவிக்க முடியும்.